# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMMAM

## ANNUAL EXAMINATION - 2017-18

## TAMIL

**TIME - 3 HOURS** | **CLASS – VI** | **MAXIMUM MARKS - 80**

நேரம் - 3 மணி | தமிழ் - ஆறாம் வகுப்பு | மதிப்பெண்கள் - 80

### பகுதி – அ

1. <u>கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளிக்க :-</u> 5 x 1= 5

புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 1891 ஆம் ஆண்டு பிறந்தார். கனகசபை என்பார் இவரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம் ஆகும். இவர் துடுக்கடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்து, தித்திக்கும் முத்தமிழ்ப் புலமை பெற்றார்; தமிழாசிரியராய் பணியாற்றினார். பாரதியாரால் 'சுப்புரத்தினம் ஒரு கவி' என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். இவர், பாரதியிடம் தாம்கொண்ட அன்பால் தம்பெயரைத் பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக் கொண்டார். அவரின் எண்ணம், எழுத்து, பேச்சு இவைகளில் புரட்சியைக் கண்ட அறிஞர் உலகம் இவரைப் 'புரட்சிக் கவிஞர்' என அழைத்து மகிழ்ந்தது.

<u>வினாக்கள்</u> :-

1. பாரதிதாசன் அவர்களின் தந்தை இவர்

அ. பாரதியார்  ஆ. சுப்புரத்தினம்  இ. கனகசபை  ஈ. தேசிய கவி

2. பாரதிதாசன் ____________ ஆசிரியராய் பணியாற்றினார்.

அ. கணித  ஆ. அறிவியல்  இ. ஆங்கில  ஈ. தமிழ்

3. இவர்மீது கொண்ட அன்பால் தம்பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்

அ. வள்ளலார்  ஆ. பாரதியார்  இ. ஔவையார்  ஈ. வள்ளுவர்

4. அறிஞர் உலகம் பாரதிதாசனை இவ்வாறு பாராட்டியது.

அ. புரட்சிக்கவிஞர்  ஆ. புரட்சித் தலைவர்  இ. புரட்சி நாயகன்  ஈ. புரட்சி மாணவன்

5. பாரதிதாசன் பிறந்த ஊர் ____________

அ. தஞ்சை　　　ஆ. புதுவை　　　இ. நாகை　　　ஈ. நெல்லை

2. <u>பின்வரும் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க</u> :-

5 x 1= 5

கனடா நாட்டைச் சேர்ந்த டேரிபாக்ஸ் என்பவர் ஒரு கூடைப்பந்தாட்ட வீரர்; புற்றுநோயால் பாதிக்கப்பட்டுத் தன் வலது காலை இழந்தவர். இருப்பினும் செயற்கைக் காலைப் பொருத்திக் கொண்டு கூடைப்பந்தாட்டம் விளையாடிப் பரிசுகள் பல பெற்றார். ஒருநாள் அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. புற்றுநோயாளிகளின் நலவாழ்வுக்காக நிதி திரட்ட எண்ணி மாரத்தான் ஓட்டம் ஓடுவது என முடிவெடுத்தார். மருத்துவர் வேண்டாம் எனக் கூறியும் கேளாமல் டேரிபாக்ஸ் கனடாவின் சாலைகளில் 143 நாட்கள் ஓடினார். நிதி மளமளவெனத் திரண்டது. இதனால் அவரின் வாழ்நாள் குறைந்தது. டேரிபாக்ஸ் தமது இருபத்து மூன்றாம் வயதில் மரணமடைந்தார். அவரின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் பதினைந்தாம் நாள் உலகின் பல நாடுகளிலும் 'டேரிபாக்ஸ் புற்றுநோய் ஓட்டம்' நடத்தப்படுகிறது.

<u>வினாக்கள்</u> :-

அ. டேரிபாக்ஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

ஆ. டேரிபாக்ஸ் எந்த விளையாட்டில் வீரராக விளங்கினார் ?

இ. எதனால் டேரிபாக்ஸ் தன் வலது காலை இழந்தார் ?

ஈ. டேரிபாக்ஸ் எதற்காக மாரத்தான் ஓட்டம் ஓட முடிவெடுத்தார் ?

உ. எந்நாளில் 'டேரிபாக்ஸ் புற்றுநோய் ஓட்டம்' நடத்தப்படுகிறது ?

3. <u>கடிதம் எழுதுக</u> :-　　　1 x 6= 6

உன் பிறந்தநாள் விழாவிற்கு அழைப்பு விடுத்து தோழன் / தோழிக்குக் கடிதம் எழுதுக.

4. <u>கட்டுரை எழுதுக</u>.　　　1 x 8= 8

சிறுசேமிப்பு

## <u>பகுதி -ஆ</u>

<u>இலக்கணம்</u> :-

அ. <u>தகுந்த சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u> :-　　　3 x 1= 3

1. ஈரெழுத்துச்சொல் -

அ. தமிழ்　　　ஆ. வானம்　　　இ. ஔவை　　　ஈ. தெருப்பு

2. எதிர்காலம் -

அ. வந்தேன்　　ஆ. வருகிறேன்　　இ. வருவேன்　　ஈ. வருவாயா?

3. உணர்ச்சி வாக்கியம் -

அ. நன்கு படி!　　ஆ. எங்கு சென்றாய் ?

இ. ஐயோ! திருடன்! திருடன்!　　ஈ. நாளை செல்வேன்

ஆ. <u>பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக</u> :- 3 x 1= 3

4. உரிச்சொற்கள் ____________ க்கு உரியவை.

அ. செய்யுள்　　ஆ. புகழ்　　இ. பூமி　　ஈ. அவர்கள்

5. கயல்விழி பாடினாள் - இதில் கயல்விழி என்பது __________

அ. வினைச்சொல்　　ஆ. பெயர்ச்சொல்

இ. இடைச்சொல்　　ஈ. உரிச்சொல்

6. ____________ முதன்மை அளித்து அமைக்கப்பட்ட வாக்கியம் செய்வினை ஆகும்.

அ. செய்பவனுக்கு　　ஆ. செயப்படுபொருளுக்கு

இ. கல்விக்கு　　ஈ. விளையாட்டுக்கு

இ. <u>அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.</u>

3 x 1= 3

7. மீன் (உரிச்சொல் சேர்த்து எழுது)

அ. சால　　ஆ. தவ　　இ. உறு　　ஈ. நனி

8. பால் பூனையால் குடிக்கப்பட்டது (செய்வினையாக்கு)

அ. பாலை பூனை குடித்ததா?　　ஆ. பால் பூனையால் குடிக்கப்படவில்லை

இ. பூனை பாலை ஏன் குடித்தது　　ஈ. பூனை பாலைக் குடித்தது

9. வழி (சரியான பொருள் எழுது)

அ. பாதை　　ஆ. வேதனை　　இ. காற்று　　ஈ. ஏதுமில்லை

ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 3 x 1= 3

10. மா, பலா, வாழை

அ. வினைச்சொல் ஆ. இடைச்சொல்

இ. திரிசொல் ஈ. தொகைச்சொல்

11. திருமணம்

அ. தமிழ்ச்சொல் ஆ. அரபுச்சொல்

இ. வட சொல் ஈ. இலத்தீன் சொல்

12. இராமனின் மனைவி யார்?

அ. செய்தி வாக்கியம் ஆ. வினா வாக்கியம்

இ. கட்டளை வாக்கியம் ஈ. உணர்ச்சி வாக்கியம்

<u>உ. சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u> :- **3 x 1= 3**

13. அ. கருத்து வகை வாக்கியங்கள் இரண்டு வகைப்படும்.

ஆ. கருத்து வகை வாக்கியங்கள் நான்கு வகைப்படும்.

இ. கருத்து வகை வாக்கியங்கள் ஆறு வகைப்படும்.

ஈ. கருத்து வகை வாக்கியங்கள் எட்டு வகைப்படும்.

14. அ. பணி என்பது தொழில்

ஆ. பணி என்பது குளிர்

இ. பணி என்பது தின்பண்டம்

ஈ. பணி என்பது தானியம்

15. அ. தாத்தா மரம் நடுவார் - இறந்த காலம்

ஆ. தாத்தா மரம் நடுவார் - நிகழ்காலம்

இ. தாத்தா மரம் நடுவார் - வருங்காலம்

ஈ. தாத்தா மரம் நடுவார் - மழைக்காலம்

## <u>பகுதி –இ</u>

அ. <u>பொருள் கூறுக</u>. (இரண்டு மட்டும்) 2 x 1= 2

1. சான்று 2. அகலை 3. புரவி

ஆ.<u>எதிர்ச்சொல் எழுதுக</u>. (இரண்டு மட்டும்) 2 x 1= 2

4.இன்பம் 5.மேதை 6.அருகில்

இ.<u>பிரித்தெழுதுக</u>. (இரண்டு மட்டும்) 2 x 1= 2

7.தண்கடல் 8.நாய்ப்பொம்மை 9.பனையோலை

ஈ.<u>நிரப்புக</u>. 2 x 1= 2

10.பொம்மைகளைச் செய்வதால் ____________ ஆற்றல் பெருகும்.

11.கல்விக்குக் கண்கொடுத்த வள்ளல்' எனக் காமராசரைப் பாராட்டிப் புகழ்ந்தவர் ______

உ.<u>சொற்றொடர் படிக்கட்டு அமை</u> :- 3 x 1= 3

12.சிட்டுக்குருவி

____________

____________

____________

ஊ.<u>ஒரு சொல் பல பொருள் எழுதுக</u>. 2 x 1= 2

13.ஆறு - ________________ , ________________

<u>பகுதி – ஈ</u>

அ.<u>பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக</u> :- 5 x 1= 5

1.காமராசரைக் 'காலா காந்தி' என இச்செய்தித்தாள் போற்றியது.

அ.ஆங்கிலப் பத்திரிகை ஆ.வட இந்தியச் செய்தித்தாள் இ.தென்னிந்தியச் செய்தித்தாள்

2.புரவி என்பது இதனைக் குறிக்கும்

அ.யானை ஆ.ஒட்டகம் இ.குதிரை

3.ஒருவர்க்குப் பெருமையும் சிறுமையும் இவரால் வரும்

அ.பெற்றோரால் ஆ.தன் செயலால் இ.பிறரால்

4.இவர் நறுந்தொகையின் ஆசிரியர்

அ.திருவள்ளுவர் ஆ.ஔவையார் இ.அதிவீரராம பாண்டியன்

5.தமிழ்நாட்டில் முதன்முதலாக மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தவர்

அ. முதலமைச்சர் எம்.ஜி.ஆர் ஆ. முதலமைச்சர் காமராசர்

இ. முதலமைச்சர் ஜெயலலிதா

**ஆ. ஏதேனும் மூன்றனுக்கு குறுகிய விடையளி.** 3 x 2 = 6

6. ஒருவரை நல்லவரா தீயவரா என எவ்வாறு அறிந்து கொள்ள இயலும் ?

7. கலக்கினும் தண்கடல் சேறாகாது – விளக்குக.

8. காமராசர் கலந்துகொண்ட விடுதலைப் போராட்டங்கள் யாவை ?

9. மகளிர் சுய உதவிக் குழுக்கள் எவற்றைக் கொண்டு பொம்மைகள் செய்திருந்தனர் ?

10. அறிஞர்க்கு அழகு யாது ?

**இ. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி.** 1 x 5 = 5

11. காமராசர் எவ்வாறெல்லாம் பாராட்டப்படுகிறார் ?

12. புரவி எடுப்பு விழா என்றால் என்ன ?

**ஈ. அடிமாறாமல் எழுதுக.** 2+2+2 = 6

13. ' எண்ணித் துணிக' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

14. 'உயர்வு' – என முடியும் குறள் - இவைகளை எழுதுக.

15. உனக்குத் தெரிந்த ஏதேனும் இரு நறுந்தொகைப் பாடல்களை எழுதுக.

**உ. முறைமாறி அமைந்த சொற்றொடர்களை ஒழுங்குபடுத்தி பத்தியாக்குக.** 6 x 1 = 6

1. நீ அழுகையை நிறுத்தாவிட்டால் ஓநாயிடம் தூக்கிப்போட்டு விடுவேன் என்று குழந்தையிடம் கூறினாள் அவள்.

2. குடிசையின் உள்ளே சிறுபையன் அழுதுக் கொண்டிருந்தான்.

3. இதைக்கேட்ட ஓநாய் குடிசையின் வெளியே நெடுநேரம் காத்துக் கொண்டிருந்தது.

4. பசியோடு உணவு தேடி அலைந்துகொண்டிருந்த ஓநாய் , ஒரு குடிசை வீட்டின் அருகே வந்தது.

5. இங்கு மக்கள் பேசுவது ஒன்று செய்வது ஒன்று இருக்கிறது என்று எண்ணிக்கொண்டே ஓநாய் சென்றது.

6. திடீரென்று என் கண்ணே, அழாதே, உன்னை ஓநாயிடம் போட மாட்டேன். ஓநாய் இந்தப்பக்கம் வரட்டும் , அதை அடித்துக்கொன்று விடுவோம் என்றாள்.

********************